# புற்றுநோய்

## ஓர் அறிமுகம்



ML/ST
616.994
BAL
R
312355

Dr. பா. பாலகோபி

குமரன் புத்தக இல்லம்

Donated from
Dr. B. Balagobi

Dr.B.Balagobi
MBBS (SL), MD(SL), MRCS (Edinburgh)
FRCS Urology (Eng)
Senior Lectuter & Consutant Urological Surgeon
Department of Surgery,
Faculty of Medicine, University of Jaffna.

UNIVERSITY OF JAFFNA
Medical Library
FACULTY OF MEDICINE

# புற்றுநோய் : ஓர் அறிமுகம்

ML 12004

# புற்றுநோய்

## ஓர் அறிமுகம்

UNIVERSITY OF JAFFNA
616.994
BAL
R/ML

**Dr. பா. பாலகோபி**
சிறுநீரக சத்திரசிகிச்சை நிபுணர்;
சிரேஷ்ட விரிவுரையாளர், சத்திரசிகிச்சைத்துறை, மருத்துவப் பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்

312355

312355

University of Jaffna
Library
312355

**குமரன் புத்தக இல்லம்**
**கொழும்பு - சென்னை**
2025

புற்றுநோய்: ஓர் அறிமுகம்
எழுதியது Dr. பா. பாலகோபி ©
முதற்பதிப்பு: 2024
மீளச்சு: 2025
குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 0112 364550, மி. அஞ்சல்: books@kumarangroup.net
இல.14, அண்ணா 2ஆம் தெரு, தேரோடும் வீதி, திருவேற்காடு, சென்னை - 600077
தொ.பே:+91 94 4480 8941, E.mail : kumaranbookhouse@yahoo.com
குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Purrunōi Ōr Arimukam
By Dr. B. Balagobi ©
First Edition: 2024
Reprint: 2025
Published by Kumaran Book House
39, 36th Lane, Colombo - 6, Tel. - 0112 364550, E.mail : books@kumarangroup.net
No.14, Anna 2nd Street, Therodum Veethi, Thiruverkadu, Chennai - 600077
Tel : +91 94 4480 8941, E-mail: kumaranbookhouse@yahoo.com
Printed by Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo - 6

வெளியீட்டு எண்: # 976

ISBN 978-624-6164-74-4

# முன்னுரை

புற்றுநோய் என்பது ஓர் உயிர்க்கொல்லி நோயாகும். இது உலகிலுள்ள மில்லியன் கணக்கான மக்களைப் பாதிப்பதுடன், குடும்பங்கள் மற்றும் சமூகத்தில் பெரும் மாறாத வடுவையும் ஏற்படுத்தி உள்ளது.

இந்நூலானது புற்றுநோயின் சிக்கலான வடிவத்தை அறிமுகப்படுத்துகிறது. அதன் தோற்றம், அதன் எண்ணற்ற வடிவங்கள், அதைப் புரிந்து கொள்வதற்கும் எதிர்த்துப் போராடுவதற்கும் நடந்து கொண்டிருக்கும் முயற்சிகள் போன்றவை பற்றிய விபரங்களை வழங்குகிறது. இந்நூலில் புற்றுநோய் தொடர்பான ஆய்வுரைகள், முக்கிய கண்டுபிடிப்புகள், நவீன சிகிச்சை முறைகள் என்பன பற்றி உள்ளடக்கப்பட்டுள்ளது.

புராதன சிகிச்சை முறைகள் தொடக்கம் நவீன மரபணு சிகிச்சை மற்றும் இலக்கு சிகிச்சை (targeted therapy) வரை புற்றுநோய்க்கான சிகிச்சை முறைகளின் பரிணாம வளர்ச்சி பற்றிய தகவல்களை இந்நூல் கொண்டுள்ளது.

புற்றுநோயின் தோற்றம், வளர்ச்சி, தூரப்பரவுகை பற்றிய விளக்கங்கள், மரபணு, சுற்றுச்சூழல் காரணிகள் மற்றும் வாழ்க்கை முறைகள் ஆகியன புற்றுநோய் உருவாவதில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதையும் எடுத்தியம்புகிறது.

மேலும், இந்நூல் புற்றுநோய் நோயாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும், அதை அவர்கள் எவ்வாறு தைரியமாக எதிர்கொண்டு மீளமுடியும் என்பதையும் கூறுகிறது.

உயிர்க்கொல்லி நோயான புற்றுநோய் பற்றிய அறிவை மேம்படுத்திக் கொள்ளவும், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதன் தாக்கத்தைக் குறைத்து அதற்கு எதிராகப் போராடவும் இந்நூல் உந்து சக்தியாக அமையும் என நம்புகிறேன்.

புற்றுநோய் தொடர்பான இந்நூலினை எழுதி வெளியிட ஊக்குவித்த வைத்தியர்கள் மற்றும் அன்பான நோயாளர்களுக்கும், நூலினை எழுதுவதற்குப் பல வழிகளில் உதவிய வைத்தியர் கோ. திவாகர் அவர்களுக்கும், இந்நூலினை திருத்தம் செய்து செப்பனிட்ட புற்றுநோயியல் வைத்திய நிபுணர்களுக்கும் முருகேசு கௌரிகாந்தன் (விரிவுரையாளர்) அவர்களுக்கும் இந்நூலை வெளியிடும் குமரன் புத்தக இல்லத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

*வைத்திய நிபுணர் பா. பாலகோபி*

## ஒருங்கிணைப்பாளர்கள்

**பேராசிரியர் ரா. சுரேந்திரக்குமரன்**

*பீடாதிபதி,*

*மருத்துவ பீடம்,*

*யாழ் பல்கலைக்கழகம்*

**வைத்திய நிபுணர் A. J. தனேந்திரன்**

*புற்றுநோயியல் சத்திரசிகிச்சை நிபுணர்*

*போதனா வைத்தியசாலை,*

*யாழ்ப்பாணம்*

**வைத்திய நிபுணர் ம. தனுயா**

*புற்றுநோயியல் பெண்ணோயியல் நிபுணர்*

*போதனா வைத்தியசாலை,*

*யாழ்ப்பாணம்.*

**வைத்திய நிபுணர் பு. சிறீதரன்**

*புற்றுநோயியல் சத்திரசிகிச்சை நிபுணர்*

*போதனா வைத்தியசாலை,*

*யாழ்ப்பாணம்.*

**வைத்தியர் கோ. திவாகர்**

*சத்திரசிகிச்சைத் துறை,*

*மருத்துவ பீடம்,*

*யாழ் பல்கலைக்கழகம்.*

# பொருளடக்கம்


| | |
|---|---|
| *முன்னுரை* | *v* |
| 1. புற்றுநோய் - ஓர் அறிமுகம் | 1 |
| 2. புற்றுநோய்க்கான ஆபத்துக் காரணிகள் | 3 |
| 3. புற்றுநோய் சார்ந்த உலகளாவிய சூழ்நிலை | 5 |
| 4. புற்றுநோய் சார்ந்து இலங்கையின் நிலை | 8 |
| 5. தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் | 10 |
| 6. புற்றுநோய்களின் வகைகள் | 11 |
| 7. வாய்குழிப் புற்றுநோய் | 12 |
| 8. தொண்டைக் குரல்வளைப் புற்றுநோய் | 17 |
| 9. களப் புற்றுநோய் | 19 |
| 10. மார்பகப் புற்றுநோய் | 23 |
| 11. நுரையீரற் புற்றுநோய் | 39 |
| 12. பெருங்குடல் புற்றுநோய் | 51 |

13. கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் 60

14. குருதிப் புற்றுநோய் 69

15. கணையப் புற்றுநோய் 75

16. சிறுநீர்ப்பைப் புற்றுநோய் 81

17. கருப்பையகப் புற்றுநோய் 86

# 1

# புற்றுநோய் - ஓர் அறிமுகம்




கலங்களில் ஆரம்பிக்கும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பல நோய்களின் ஒருங்கிணைந்த தொகுப்பே புற்றுநோயாகும். உடலானது பலவகையான கலங்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இயல்பாகவே உடலில் உள்ள கலங்கள் வளர்ந்து, பிரிந்து உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளத் தேவையான அளவிற்கு பல கலங்களை உண்டுபண்ணுகிறது. இதன் போது சில புதிய கலங்கள் உடலுக்குத் தேவையற்ற வகையில் உருவாகின்றன. அத்துடன் ஏற்கனவே உருவான பழைய வயதடைந்த கலங்கள் இறக்க வேண்டிய நேரத்தில் இறக்காமல் இருக்கின்றன. இவ்வாறாக அதிகப்படியான செல்கள் வளர்ச்சியடைந்து கழலை எனப்படும் இழையங்களின் கூட்டத்தை உருவாக்குகின்றன.

இவ்வாறு உருவாகும் அனைத்து கழலைகளும் புற்றுநோய் என முடிவிற்கு இலகுவாக வரமுடியாது. இவற்றினைத் தீங்கில்லா கழலைகள் மற்றும் உடலுக்கு ஊறுவிழைவிக்கும் கழலைகள் என இருவகையாகப் பிரிக்கலாம்.


உடலுக்குத் தீங்கில்லாதவற்றைப் புற்றுநோய் எனும் பதத்தினுள் உள்ளடக்கத் தேவையில்லை. அவற்றைப் பெரும்பாலும் உடலில் இருந்து அகற்றுவதன் மூலம் அவற்றால் ஏற்படும் பாதிப்பினைச் சரி செய்யலாம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவற்றை உடலில் இருந்து நீக்கிய பின்பு மீண்டும் தோன்றுவது இல்லை. அத்துடன் தீங்கில்லா கழலைகளில் உள்ள கலங்கள் மற்ற உடல் பகுதிகளுக்குப் பரவுவதில்லை.

உடலுக்கு ஊறுவிளைவிக்கும் கழலைகள் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடியன. இந்த வகை கழலையில் உள்ள கலங்கள் இயல்புக்கு மாறாக, எந்தவித கட்டுப்பாடும் இன்றி பிரிவுற்றுப் பெருகும். இப்படி ஏற்பட்ட புற்று நோய்க்கலங்கள் இதனைச் சுற்றியுள்ள இழையங்களுக்குச் சென்று அவற்றை அழித்துவிடும். புற்றுநோய்க் கலங்கள் ஊறு விழைவிக்கும் கழலைகளை உடைத்துக்கொண்டு அங்கிருந்து இரத்த ஓட்டம் மற்றும் நிணநீர் மண்டலத்தினுள் நுளையும்.

உடலில் இரத்த நாளங்கள் மூலம் இரத்த ஓட்டம் நடைபெறுகின்றது. நிணநீர் மண்டலத்தில் நிணநீர் மற்றும் வெண்குருதிச் சிறுதுணிக்கைகளை நிணநீர் நாளங்கள் உடலில் உள்ள எல்லா இழையங்களுக்கும் எடுத்துச் செல்லும். இதன் போது ஊறுவிளைவிக்கும் கழலைகளில் இருந்து வெளியேறும் புற்று நோய்க்கலங்கள் இரத்த ஓட்டம் நிணநீர் மண்டலத்தின் மூலம் மற்ற உடல் உறுப்புக்களுக்குச் சென்று அப்பகுதியில் கழலைகளை ஏற்படுத்தும். இவ்வாறு புற்றுநோய் பரவுவதை தூரப் பரவுதல் (Metastasis) என்பர்.

# 2

# புற்றுநோய்க்கான ஆபத்துக் காரணிகள்



புற்றுநோய்க்கான காரணிகளை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன:

1. நடத்தை தொடர்பான ஆபத்துக் காரணிகள்:
   - புகையிலைப் பயன்பாடு
   - மதுபானத்தின் ஆபத்து விளைவிக்கும் பயன்பாடு
   - ஆரோக்கியமற்ற உணவுப் பயன்பாடு
   - குறைந்த உடற் செயற்பாடு
2. உயிரியல் தொடர்பான காரணிகள்
   - அதிக எடை
   - வயது
   - தனிநபரின் பாலினம்




3. சுற்றுச்சூழல் தொடர்பான ஆபத்துக் காரணிகள்
    - இரசாயன பதார்த்தங்களின் தாக்கங்களுக்கு முகங்கொடுத்தல்
    - வைரஸ்கள்
    - பாக்டீரியாக்கள்
    - ஒட்டுண்ணிகள் போன்ற சுற்றுச்சூழல் புற்றுநோய்கள்

4. மரபணு தொடர்பான ஆபத்துக் காரணிகள்



# 3
# புற்றுநோய் சார்ந்த உலகளாவிய சூழ்நிலை



உலகளவில், அனைத்து வகையான புற்றுநோய்களிலும் 5-10% மரபணு குறைபாடுகள் காரணமாகவும், 90-95% சுற்றுச்சூழல் தொடர்பாகவும், புகையிலை (25%), மது (4-5%), காரணமாகவும், ஊட்டச்சத்து உடல் செயற்பாடு குறைவு (3-4%) போன்ற நடத்தை சார்ந்த வாழ்க்கை முறைக்